# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2382/33 - 2024 මැයි මස 03 වැනි සිකුරාදා - 2024.05.03

*2382/33 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்**

*3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான அறிவித்தல்*

*திருத்திய 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் அடிப்படையில், முதலீட்டு மேம்பாட்டு விடயப்பொறுப்பு அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், கொழும்பு இன்டர்நெசனல் கென்ரேனர் டேர்மினல் லிமிட்டெட்* (Colombo International Container Terminals Limited) *கம்பனியின் கொள்ளளவை விஸ்தரிக்கும் கருத்திட்டம் தொடர்பிலான 2020, நவெம்பர் மாதம் 16 ஆந் திகதிய 2202/ 3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகளுக்கு மேலதிகமாக, இந்தக் கட்டளை மூலம் பின்வருமாறு பிரகடனம் செய்கின்றேன் ; அதாவது-*

*கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு 2020, நவெம்பர் மாதம் 16 ஆந் திகதிய 2202/ 3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல் திகதி முதல் வழங்கப்பட்டிருந்த இரண்டு (02) வருட காலப்பகுதிக்கு 2024 ஆம் ஆண்டின் இறுதி வரை (அதாவது 2024, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை) நீடிப்பதற்காக 2020, நவெம்பர் மாதம் 16 ஆந் திகதிய 2202/ 3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் (1) ஆம் பிரிவு பின்வருமாறு இத்தால் திருத்தம் செய்யப்படுகின்றது :-*

> *"(1) 2024, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடைகின்ற கருத்திட்ட அமுல்படுத்தப்படும் கால எல்லைக்குள் எதிர்மறைப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் தவிர கருத்திட்டக் கொள்ளளவை விஸ்தரிப்பதற்கு அவசியமான சகல உபகரணங்கள்/ உதிரிப்பாகங்கள்/ கூறுகள் சுங்க வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகின்றன."*


1A - PG 6712 — 324 (2024/05)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

கொள்ளளவை விஸ்தரிக்கும் கருத்திட்டத்தின் முதலீட்டைக் குறிப்பிடுவதற்காக 2020, நவெம்பர் மாதம் 16 ஆந் திகதிய 2202/ 3 ஆம் இலக்க இலங்கை அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் (2) ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் (3) ஆம் பிரிவு உட்புகுத்தப்படுகின்றது :

"(3) 2024, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடைகின்ற கருத்திட்ட அமுல்படுத்தப்படும் கால எல்லைக்குள் கருத்திட்டக் கம்பனி குறைந்தபட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன் அறுபது (US$ 60 Mn) ஆன தொகையை, அல்லது பரிமாற்றிக் கொள்ளத்தக்க வேறு எந்தவொரு நிதி அலகின் மூலம் மேற்படி பெறுமதிக்கு சமமான தொகையை உத்தேசக் கொள்ளளவை விஸ்தரிக்கும் கருத்திட்டத்தில் முதலீடு செய்தல் வேண்டும்."

**ரணில் விக்கிரமசிங்க,**
முதலீட்டு மேம்பாட்டு அமைச்சர்.

கொழும்பு,
2024, மே 03.

EOG 05-0022